Nesareh Um Thiru patham / / நேசரே உம் திரு பாதம்

 Fmaj

நேசரே உம் திரு பாதம் அமர்ந்தேன்
நிம்மதி நிம்மதியே (2)
ஆர்வமுடனே பாடித்துதிப்பேன்
ஆனந்தம் ஆனந்தமே (2)
அடைக்கலமே அதிசயமே
ஆராதனை ஆராதனை

1 உம் வல்ல செயல்கள்
நினைத்து நினைத்து
உள்ளமே பொங்குதய்யா
நல்லவரே நன்மை செய்தவரே
நன்றி நன்றி ஐயா
வல்லவரே நல்லவரே
ஆராதனை ஆராதனை

2 பலியான செம்மறி
பாவங்கள் எல்லாம்
சுமந்து தீர்த்தவரே
பரிசுத்த இரத்தம் எனக்காக அல்லோ
பாக்கியம் பாக்கியமே
பரிசுத்தரே படைத்தவரே
ஆராதனை ஆராதனை

3 எத்தனை இன்னல்கள்
என் வாழ்வில் வந்தாலும்
உம்மைப் பிரியேன் ஐயா

இரத்தமே சிந்தி சாட்சியாய் வாழ்வேன்
நிச்சயம் நிச்சயமே
இரட்சகரே இயேசுநாதா
ஆராதனை ஆராதனை

★★★★★